
S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com



RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் டிசம்பர் 10 * 2025 * மலர் -1 * இதழ்-192* VOL-1 * ISSUE-192 விலை ரூ.3 * பக்கம் -4


# புதுச்சேரியில் விஜய் பிரசாரம்; துப்பாக்கியுடன் வந்த நபரால் பரபரப்பு!



புதுச்சேரி, டிச.10–

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்திற்கு பின்னர் 72 நாள்களுக்கு பிறகு புதுச்சேரியில் நேற்று திறந்த வெளி பொதுக்கூட்டத்தில் விஜய் பிரசாரம் செய்தார். இந்த கூட்டத்திற்கு துப்பாக்கியுடன் வந்த ஒரு நபரால் திடீரென பரபரப்பு ஏற்பட்டது.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு 2026 சட்ட சபை தேர்தல் நடைபெற உள்ளது. அதையொட்டி த.வெ.க.(தமிழக வெற்றிக் கழகம்) தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் 13–ஆம் தேதி தனது பிரசாரத்தை தொடங்கினார். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பிரசாரம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி பிரசாரம் நடைபெற்ற நிலையில் 3–வது வார சனிக்கிழமையில் அதாவது செப்டம்பர் 27–ஆம் தேதி கரூரில் நடந்த பிரசாரத்தின் போது கடுமையான கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100–க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அதைத்தொடர்ந்து அவரது பிரசாரம் முடங்கியது. அதன் பின்னர் ஒரு மாதம் கழித்து அவர் கூட்ட நெரிசலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரை சென்னைக்கு அழைத்து பேசினார். அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கினார். அதைத்தொடர்ந்து காஞ்சிபுரத்தில் ஒரு தனியார் கல்லூரியில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை தொடர்ந்தார்.

பின்னர் சேலத்தில் ரோடுஷோ மற்றும் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கேட்டார். ஆனால் கார்த்திகை மற்றும் பாபர் மசூதி இடிப்பு தினத்தை காரணம் காட்டி போதிய பாதுகாப்பு வழங்க முடியாது என கூறி அனுமதி அளிக்க போலீசார் மறுத்து விட்டனர். இதனால் அங்கு பிரசாரம் நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. அதன் பின்னர் ஈரோட்டில் பிரசாரம் நடத்த த.வெ.க.வினர் ஏற்பாடு செய்தனர். அங்கும் பாதுகாப்பு காரணமாக பிரசாரத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. தற்போது வேறு இடத்தில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

இதுபோன்றுதொடர்ந்து சிக்கல் ஏற்பட்ட நிலையில் புதுச்சேரியில் கடந்த 5–ஆம் தேதி ரோடுஷோ மற்றும் பொதுக்கூட்டம் நடத்த த.வெ.க.வினர் அனுமதி கேட்டனர். அங்கும் கரூர் சம்பவத்தை காரணம் காட்டி ரோடுஷோ நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் பொதுக்கூட்டம் நடத்திக்கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டது.

அதற்காக போலீசார் பல நிபந்தனைளை விதித்தனர். அதாவது பிராசர பொதுக்கூட்டத்தில் புதுச்சேரியை சேர்ந்த கியூ ஆர் கோடு பாஸ் வைத்திருக்கும் 5000 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அண்டை மாநிலமான தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் மற்றும் புதுச்சேரி மாநிலத்தை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்களை சேர்ந்தவர்கள் கூட்டம் நடைபெறும் மைதானத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். சிறுவர்கள், கர்ப்பிணிகள், முதியவர்கள் கூட்டத்தில் பங்கேற்க அனுமதி இல்லை.

மேலும் பொதுக்கூட்டம் நடத்த மேடை அமைக்கவும், மேஜை நாற்காலிகள் போடவும், அனுமதி இல்லை. விஜய் பிரசார வாகனத்தில் இருந்து மட்டுமே பேச வேண்டும் என்றும் போலீசார் கட்டுப்பாடுகள் விதித்தனர். இவற்றை ஏற்றுக் கொண்ட த.வெ.க.வினர் புதுச்சேரியில் இன்று விஜயின் பிரசாரத்திற்கு ஏற்பாடு செய்தனர். அதைத் தொடர்ந்து 73 நாள்களுக்கு பிறகு பொதுவெளியில் நடைபெறும் விஜயின் பிரசார பொதுக்கூட்டம் புதுச்சேரி உப்பளம் துறைமுக மைதானத்தில் இன்று காலை 10 மணி முதல் 12 மணி வரை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு விஜய் பேசினார். இதற்காக அவர் சென்னை நீலாங்கரையில் உள்ள தனது வீட்டில் இருந்து இன்று காலை கார் மூலம் புதுச்சேரி வந்தடைந்தார். பொதுக்கூட்டம் நடைபெற்ற இடத்தில் மேடை எதுவும் அமைக்கப்படவில்லை. எனவே, பிரசாரவேனில நின்றபடியே விஜய் பேசினார்.

விஜயின் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக புதுச்சேரி உப்பளம் துறைமுக மைதானத்தில் ஏராளமானோர் திரண்டனர்.

இவர்களில் கியூஆர் கோடு பாஸ் வைத்திருந்த 5000 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். மற்றவர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. இதனால் பொதுக்கூட்டத்திற்கு வந்தவர்களுக்கும், போலீசாருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஒரு பாஸ்க்கு 2 பேர் அனுமதிக்கபடுவர் என த.வெ.க.வினர் கூறியதாகவும், ஆனால் போலீசார் ஒருவரை மட்டுமே செல்ல அனுமதித்ததாகவும் கூறி தகராறு செய்தனர். மேலும் கியூஆர் கோடு பாஸ் இல்லாத ஏராளமானோர் பொதுக்கூட்டம் நடைபெற்ற உப்பளம் மைதானத்திற்கு வெளியே திரண்டு நின்று எங்களை உள்ளே விடுங்க என போலீசாரிடம் கெஞ்சினர். ஆனால் கியூஆர் கோடு பாஸ் இல்லாதவர்கள் உள்ளே செல்ல போலீசார் அனுமதிக்கவில்லை.

பொதுக்கூட்டம் நடைபெற்ற மைதானத்திற்கு செல்பவர்கள் மெட்டல் டிடெக்டர் வாசல் வழியாக மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

அப்போது ஒருவர் சென்ற போது மெட்டல் டிடெக்டர் கருவி பீம்... பீம்... என சத்தமிட்டது.




அதைத்தொடர்ந்து அந்த நபரை பிடித்து போலீசார் சோதனை செய்தனர். அப்போ து அவர் தனது இடுப்பில் ஒரு கை துப்பாக்கியை செருகிய நிலையில் வைத்திருந்தார்.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கன்னியாகுமரி மாவட்டம், தேங்காபட்டணம் துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளையும், பெரியநாயகி தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மீன்பிடி இறங்கு தளத்தில் தூண்டில் வளைவு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதையும் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் மனோதங்கராஜ், கலெக்டர் அழகுமீனா ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர். அருகில் ராஜேஷ்குமார் எம்.எல்.ஏ. மற்றும் பலர் உள்ளனர்.

## களக்காட்டில் துணிகரம்:

# வருவாய்த்துறை ஊழியர் வீட்டில் 23 பவுன் நகை கொள்ளை!

## மர்ம ஆசாமிகள் கைவரிசை!!



களக்காடு,டிச.10–

களக்காட்டில் ஓய்வு பெற்ற வருவாய் துறை ஊழியர் வீட்டு கதவை உடைத்து தங்க நகைகளை கொள்ளை அடித்த மர்ம நபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

களக்காடு உச்சினிமாகாளி அம்மன் கோவிலில் இருந்து குடில் தெரு செல்லும் சாலையை சேர்ந்தவர் ஐயம்பெருமாள்(70). ஓய்வு பெற்ற வருவாய் துறை ஊழியர் ஆவார். இவர் தனது வீட்டை பூட்டிவிட்டு குடும்பத்தின ர்களுடன் வெளியூர் சென்று விட்டார் வீடு பூட்டப்பட்டிருந்ததைநோட்டமிட்டமர்மநபர்கள்சம்பவத்தன்று இரவில் வீட்டு முன் பக்க கதவை மிஷின் மூலம் உடைத்து உள்ளே புகுந்தனர். பின்னர் அங்கு பீரோவில் வைக்கப்பட்டிருந்த 23 பவுன் எடையுள்ள தங்க நகைகளையும், ஒரு புது பைக்கையும் கொள்ளையடித்து விட்டு தப்பி சென்று விட்டனர். இது பற்றி களக்காடு போலீசில் புகார் செய்யப்பட்டது இதை அடுத்து நாங்குநேரி டிஎஸ்பி தர்ஷிகா நடராஜன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர்.

மேலும் தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அங்கு பதிவாகி இருந்த கைரேகைகள் சேகரிக்கப்பட்டன. இந்த கொள்ளை சம்பவம் களக்காட்டில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது



பழனி முருகன் மலைக்கோவிலில் உற்சவர் சன்னதியில் ரூ.4 கோடி செலவில் வெள்ளி தகடுகள் பதிக்கும் பணியை அமைச்சர்கள் அர.சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர். அருகில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாவட்ட கலெக்டர் சரவணன், இணை ஆணையர்கள் எம்.கார்த்திக், செ.மாரிமுத்து, அறங்காவலர் குழு தலைவர் கே.எம்.சுப்பிரமணியம், அறங்காவலர்கள் தனசேகர், ஜி.ஆர். பாலசுப்பிரமணியம், பாலசுப்பிரமணி, அன்னபூரணி ஆகியோர் உள்ளனர்.



எடப்பாடியில் நடந்த நிகழ்ச்சியில் மாநில அளவிலான விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் ராஜேந்திரன் பரிசு கோப்பை வழங்கினார். அருகில் கலெக்டர் பிருந்தாதேவி, நகர் மன்ற தலைவர் பாஷா மற்றும் பலர் உள்ளனர்.

## மதுரை கப்பலூர் சுங்கச்சாவடி அருகே நள்ளிரவில் சம்பவம்:

# தகராறை தட்டிக்கேட்ட தனியார் பஸ் கண்டக்டர் வெட்டிக்கொலை!



திருமங்கலம்,டிச.10–

மதுரை மாவட்டம் திருமங்கலம் அடுத்த டி.கல்லுப்பட்டி அருகே உள்ள வே.வெங்கடாசலபுரம் கிராமத்தைச் சேர்ந்த ராமையா என்பவரது மகன் அழகர்சாமி (45)தனியார் பேருந்து நடத்துனராக பணிபுரிந்து வந்தார். இவருக்கு திருமணமாகி ஒரு மகன், மகள் உள்ளனர். மகன் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மருத்துவ படிப்பு படித்து வருகிறார். மகள் பதினொன்றாம் வகுப்பு படித்து வருகிறார். இந்த நிலையில் விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் உள்ள தனியார்பேருந்து பணிமனையில் பணியாற்றும் அழகர்சாமி நேற்று இரவு வழக்கம்போல் பணி முடித்துவிட்டு அங்கிருந்து வெங்கடாசலபுரத்தில் உள்ள வீட்டிற்கு வந்தார்.

திருவண்ணாமலை கோவிலுக்கு தங்களது உறவினர்கள் செல்வதாகவும் விருதுநகர் மாவட்டம் திருத்தங்கலில் இருந்து வேனில் வருவதாகவும் அவர்களுடன் தானும் செல்கிறேன் என கூறிவிட்டு வீட்டிலிருந்து புறப்பட்டு வந்தார். திருமங்கலம் அருகே உள்ள கப்பலூர் சுங்கச்சாவடி பகுதியில் இறங்கியவர் அங்கிருந்த ஒரு தனியார் பேக்கரி முன்பு உறவினர்கள் வருகையை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தார். நேற்று நள்ளிரவு 12 மணிக்கு அப்பகுதிக்கு போதையில் வந்த வாலிபர் ஒருவர் அழகர்சாமியிடம் வந்து தகாத வார்த்தைகளால் திட்டி மணி என்ன என்று கேட்டுள்ளார்.இதனால் ஆத்திரமுற்ற அழகர்சாமி அவனை அடித்து விரட்டினார். அடி வாங்கிய வாலிபர் அங்கிருந்து செல்வது போல் சென்று திடீரென கையில் அரிவாளுடன் வந்து அங்கு நின்று கொண்டிருந்த அழகர்சாமியின் கழுத்தில் வெட்டியதில் நிலை குலைந்து கீழே விழுந்ததும் தொடர்ந்து அந்த வாலிபர் தலை மற்றும் கழுத்துப் பகுதியில் சரமாரியாக வெட்டியதில் அழகர்சாமி ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரிழந்தார். திருமங்கலம் நகர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

விரைந்து வந்த போலீசார் அங்கு அரிவாளுடன் சுற்றிக் கொண்டிருந்த வாலிபரை பிடித்து விசாரித்த போது கப்பலூர் கிழக்கு தெருவை சேர்ந்த வீரா என்பவரது மகன் கல்யாண்குமார் (18) என்பதும் ஏற்கனவே கப்பலூரில் தகாத வார்த்தையால் பேசி சுற்றிக் கொண்டிருந்த போது அதை தட்டி கேட்ட போஸ் (65) என்பவரை அரிவாளால் வெட்டிவிட்டு சுங்கச்சாவடிக்கு வந்த போது இங்கே வந்து நடந்த தகராறில் ஒருவரை அழகர்சாமி வெட்டினார்.

இதைத் தொடர்ந்து வாலிபரை கைது செய்த காவல்துறையினர் திருமங்கலம் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.மேலும் இறந்த அழகர்சாமியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காயம் அடைந்த போஸ் ஆம்புலன்ஸ் மூலம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். தற்போது உயிருக்கு ஆபத்தான நிலையில் அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளியில் ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கு கட்டுமான பணியினை மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். அருகில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் கவிதா, ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் மலர்விழி, மாவட்ட விளையாட்டு அலுவலர் (பொ) நடராஜமுருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில், விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் பேரூராட்சியில் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டு நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க.பொன்முடி முன்னிலையில் கலந்துகொண்டார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ம.ஜெயசந்திரன், அரகண்டநல்லூர் பேரூராட்சி தலைவர் எஸ்.அன்பு உட்பட பலர் உள்ளனர்.



# புதுக்கோட்டை அருகே ஆலங்குடியில் த.வெ.க. சார்பில் பூத் பயிற்சி பட்டறை கூட்டம்!

புதுக்கோட்டை,டிச.10

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் திருவரங்குளம் தெற்கு ஒன்றியத்துக் குட்ப்பட்ட தமிழக வெற்றி கழக கட்சியின் சார்பில் பூத் பயிற்சி பட்ட றை கூட்டம் தனியார் மஹாலில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் சுரேஷ், இணைச் செயலாளர் மைக்கேல், மற்றும் ஒன்றிய பொருளாளர் சிவனேசன் ஆ கியோர் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் பூத்து கமிட்டி பொறுப்பாளர்கள் வரும் சட்டமன்ற த் தேர்தலுக்கு என்ன செய்யலாம்? எப்படி பூத் பணிகளை செய்யலாம் என பயிற்சி பட்டறை கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் தற்போது வழங்கப்பட்டுள்ள எஸ் ஐ ஆர் பூர்த்தி செய் து அனைத்து மக்களுக்கும் சென்றடைந்ததா? நமது கட்சி சா ர்பில் உள்ள பொறுப்பாளர்கள் மற்றும் அனைவருக்கும் பூர்த் தி ஆகிவிட்டதா? என்பது குறித்து அவரவர் உறவினர்கள் மற்றும் கிராமங்களில் விசாரிக்க வேண்டும்.அப்படி ஏதேனும்விடுபட்டிருந்தால் உடனடியாக அவர்களுக் கு உதவி செய்ய வேண்டும்.

கூட்டத்தில் தமிழக வெற்றி கழக சார்பில் ஒவ்வொரு தொகு தியிலும் உழைக்க வேண்டும் தலைவருக்கு நல்ல பெயர் எடுத்துக் கொடுக்க வேண்டும் அனைவரும் நடைபெற உள்ள 2026 காண சட்டப் பேரவை தேர்தலில் உழைத்து தலைவரை தலைமையில் தலைவராக்க உறுதி எடுத்துகொல்வோம். கட்சி நிர்வாகிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



மத்தூர் பேருந்து நிலையத்தில் தமிழக வாழ்வுரிமைக் கட்சிகள் சாலை ஓரம் உள்ள புளிய மரங்களை முறையின்றி வெட்டப்படுவதாக மக்களை அச்சுறுத்த வகையில் இருப்பதாக கூறி 50க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## புதுக்கோட்டை அருகே ஆலங்குடியில்

# மின்கம்பத்தில் கார் மோதல்; டிரைவர் உயிர் தப்பினார்!

புதுக்கோட்டை,டிச.10

புதுக்கோட்டை அருகே ஆலங்குடி அறந்தாங்கி பிர தான சாலை உள்ளது. ஆலங்குடியில் உள்ள அண் ணா நகர் சாலையின் கீழ் புரத்தில் உயர் மின் கம்பம் ஒன்று உள்ளது.

இதையடுத்து நேற்று முன்தினம் நள்ளிரவு இந்த வழியாக வந்த ஆலங்குடி அண்ணாநகரை சேர்ந்த மூர்த்தி மகன் விக்னேஷ் (வயது 27) இவர் ஓட்டி வந் த கார் சாலையோரம் உள்ள உயர் மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

கார் மின்கம்பத்தில் மோதி மின்கம்பம் முறிந்து சா லையின் நடுவே சாய்வானது. கார்டிரைவர் விக் னேஷ் எவ்வித காயமும் மின்றி டிரைவர் உயிர் தப் பினார்.

நள்ளிரவில் நடைபெற்றதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மின் வாரியத்திற்கு தகவல் தெரிவி த்தனர் மின்மாற்றி எண்.3ல் அப்பகுதிக்கு முழுவது ம் மின் வினியோகம் நிறுத்தப்பட்டது.

விரைந்து வந்த ஆலங்குடி உதவி செயற்பொறியா ளர் மகாதேவராஜா சாக ஊழியர்களுடன் பொக் லைன் எந்திரம் வைத்துக் கொண்டு இரவு முழுவ தும் மின் கம்பத்தை அகற்றும் பணியில் ஈடுப் பட்ட னர். இதனால் இரவு செல்லக்கூடிய வாகனங்கள் தடை பட்டது நேற்று புதிய மின்கம்பம் நட்டு பின் வழக்க ம்போல் மின்சாரம் அப்பகுதிக்கு வினியோகம் செய்யப்பட்டது.

ஆலங்குடியில் நள்ளிரவில் கார் மின் கம்பத்தில் மோதி டிரைவர் எவ்வித காயமும் இன்றி உயிர் பி ழைத்தது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கார் விபத்து நடந்து இரவு பகலாக பணியை துரித மாக முடித்து நேற்று மின் சாரத்தை அப்பகுதிக்கி வழங்கியதால் அப்பகுதி பொதுமக்கள் மின்வாரிய ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

# தூத்துக்குடியில் ஊரக வளர்ச்சி துறை ஊழியர்கள் சங்கம் மறியல்!

தூத்துக்குடிடிச.10

தூத்துக்குடியில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் மறியல் போராட்டம் நடத்தினர்.

புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து, பழைய பென்ஷன் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணி புரியும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும், என்பது உட்பட 10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி தூத்துக்குடியில் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை ஊழியர்கள் சங்கம் சார்பில், மாவட்ட தலைவர் கருப்பசாமி தலைமையில் மாநகராட்சி அலுவலகம் முன்பு மறியல் பேரணி நடைபெற்றது.

மாநகராட்சியில் இருந்து புறப்பட்ட பேரணியில் பங்கேற்றவர்கள் பழைய பேருந்து நிலையம் முன்பு தரையில் அமர்ந்து மறியல் போராட்டம் நடத்தினர்.

இதையடுத்து மறியில் ஈடுபட்ட 68 பெண்கள் உட்பட 98பேரை மத்தியபாகம் போலீசார் கைது செய்து திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர்.

## திருப்பத்தூர் அருகே

# தனியாக இருந்த முதியவர் வீட்டில் பெட்ரோல் வீச்சு!

## மர்ம நபர்களால் பரபரப்பு!!



திருப்பத்தூர் டிச.10

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த செல்லரப்பட்டி கண்ணாடி காரன் வட்டம்.பகுதியை சேர்ந்த தேவன் (70)என்பவருக்கு மணியம்மாள் என்கிற மனைவியும் ராமதாஸ், செந்தில்குமார் என இரண்டு மகன் உள்ளனர். இதனையெடுத்து மனை வி மற்றும் மகன்கள் வெளியூரில் உள்ளதால் தேவன் என்பவர் மட்டும் வீட்டினுள் தனியாக வசித்து வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று இரவு வீட்டினுள் உறங்கி கொண்டு இருந்த போது மர்ம நபர்கள் ஆயில் மற்றும் வாட்டர் பாட்டில் பெட்ரோல் நிரப்பி வீட்டினுள் போட்டுள்ளனர். பின்னர் ஆயில் மற்றும் பெட்ரோல் பாட்டில்களை மர்ம நபர்கள் விட்டு அங்கிருந்து தப்பி சென்று உள்ளனர். பின்னர் இரவு நேரத்தில் வெளிய வந்து பார்த்த முதியவர் தேவன் பெட்ரோல் மற்றும் ஆயில் பாட்டில்களை கண்டு அதிர்ச்சி அடைந்த நிலையில் கந்திலி போலீசாருக்கு தகவல் அளித்து உள்ளார். இந்த புகாரின் பேரில் கந்திலி போலீசார் முதியோரை கொலை செய்ய திட்டமா என பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# நடைபாதையை தனிநபர் ஆக்கிரமிப்பு; 11 குடும்பங்கள் கடும் பாதிப்பு!



தூத்துக்குடிடிச.10

தூத்துக்குடி மாவட்டம் சேர்வைக்காரன்மடம் கிராமம், புதுமனை – காமராஜர் ஆதித்தனார் சாலை இணைப்புபகுதியில்உள்ளசர்வே எண்1151A1A1A1A1A பகுதியில், பொதுமக்கள் பயன்படுத்தும் 8 அடி அகல நடைபாதை மீது ஒரு நபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதுகுறித்து அந்த பகுதியைச் சேர்ந்த 11 குடும்பங்கள் சார்பாக பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர். மனுவில், அரசு விதிப்படி சர்வேயர் அளவீடு செய்து கல் நட்டிருந்த போதிலும், அந்த நபர் கற்களை அகற்றி மீண்டும் வேலி அமைத்து நடைபாதையை ஆக்கிரமித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் வசிக்கும் 11 குடும்பங்கள் வீடுகளுக்குச் செல்ல முடியாமல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## தூத்துக்குடியில்

# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்!

தூத்துக்குடிடிச.10

திங்கள்கிழமை மக்கள் குறை களையும் நாள் கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கனை பெற்றுக் கொண்டார். தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திங்கள்கிழமை மக்கள் குறை களையும் நாள் கூட்டம் இன்று (டிச 8) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல் உத்தரவு, வரன்முறைப்படுத்திபட்டா,கலைஞரின்கனவுஇல்லம்திட்டத்தின் கீழ் வீடு வேண்டி, தொழில் கடனுதவி, முதியோர் உதவித் தொகை, விதவை உதவித்தொகை, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கியரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது உரியநடவடிக்கை மேற்கொள்ளுமாறு துறைசார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். முன்னதாக, மாற்றுத்திறனாளிகளை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களைப் பெற்றுக்கொண்டு அவர்களின் கோரிக்கைகளை ஆட்சியர் இளம்பகவத் கேட்டறிந்தார். இக்கூட்டத்தில் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# டிச.13 ம் தேதி தூத்துக்குடி மாவட்ட லோக்அதாலத்!

தூத்துக்குடிடிச.10

தூத்துக்குடி மாவட்டத்தில் 7 ஊர்களில் வருகிற 13ஆம் தேதி தேசிய மக்கள் நீதிமன்றம் நடக்கிறது.

தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு உத்தரவின்படி தூத்துக்குடி மாவட்டத்தில் வருகிற 13ஆம் தேதி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் தலைமையில் தேசிய மக்கள் நீதிமன்றம் நடக்கிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடியில் 6 அமர்வுகளும், கோவில்பட்டியில் 2 அமர்வுகளும், ஸ்ரீவைகுண்டத்தில் 2 அமர்வுகளும், திருச்செந்தூரில் 2 அமர்வுகளும், விளாத்திகுளம், சாத்தான்குளம், ஓட்டப்பிடாரம் தாலுகாவில் தலா ஒரு அமர்வு உள்பட மொத்தம் 15 அமர்வுகள் நடக்கிறது.

இதில் சமாதானமாக செல்லக்கூடிய குற்றவியல் வழக்குகள், அனைத்து வகையான சிவில் வழக்குகள், மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு வழக்குகள், காசோலை மோசடி வழக்குகள், மணவாழ்க்கை சம்பந்தப்பட்ட வழக்குகள், வங்கிக்கடன் வழக்குகள் உள்ளிட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளதால், தேசிய மக்கள் நீதிமன்றத்தில் வழக்குதாரர்கள், எதிர் வழக்காடிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கந்திலி.மைக்கா மேட்டில்

# ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் ரூ.99 லட்சம் மதிப்பீட்டில், கிராம அறிவுசார் மையக் கட்டிட பணி!

## நல்லதம்பி எம்.எல்.ஏ. பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்!!

திருப்பத்தூர் டிச.10

திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட, எலவம்பட்டி ஊராட்சி செல்லரப்பட்டி அடுத்த மைக்காமேடு செல்லும் சாலையில் ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் கிராம அறிவுசார் மைய கட்டிட பணியினை, திருப்பத்தூர்சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்திலி மத்திய ஒன்றிய கழக செயலாளர் மாவட்ட கவுன்சிலர், மாவட்ட திட்ட குழு உறுப்பினர் வழக்கறிஞர் குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் மேனகா விவேகானந்தன் வரவேற்று பேசினார்.

கட்டிடப் பணியினை நல்ல தம்பி எம் எல் ஏ பூமி பூஜை செய்து துவக்கி வைத்து

பேசியதாவது பெண்களுக்காக பல திட்டங்களை திராவிட மாடல் ஆட்சி செய்து கொண்டு இருக்கிறது. குடும்ப பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை, தாயுமானவர் திட்டம் என பல்வேறு திட்டங்களை பெண்களுக்காகவே முன்னிலைப்படுத்தி திட்டங்களை செய்து வருகிறது என பேசினார்.



## வாணியம்பாடி குளோபல் பள்ளியில்

# கலை மற்றும் அறிவியல் கண்காட்சி!

வாணியம்பாடி,டிச.10

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நேதாஜி நகர் பகுதியில் இயங்கி வரும் குளோபல் பள்ளியில் ஒரு நாள் கலை மற்றும் அறிவியல் கண்காட்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளியின் தாராளரும் செயலாளருமான ஒ.அப்துல்லா பாஷா தலைமை வகித்தார். நகரமன்ற உறுப்பினர்கள் எம்.எஸ்.சுல்தானா சமி, குபேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி முதல்வர் ருதைனா ரஹ்மான் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக நகர திமுக செயலாளர் வி.எஸ்.சாரதி குமார் கலந்து கொண்டு அறிவியல் கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார். பின்னர் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டினார். கண்காட்சியில் சுமார் 200 மாணவர்கள் கலந்து கொண்டு 100க்கும் மேற்பட்ட மாதரிகளை காட்சிப்படுத்தினர். இதில் பள்ளி மாணவர்கள் தங்களது அறிவியல் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் வால்கனேவ், வளிமண்டல அடுக்குகள், மனித உடல் உறுப்புகள், ஆரோக்கியமான உணவுகள், அறிவியல் தொடர்பான சுற்றுச்சூழல் மாதிரிகள், சூரிய குடும்பம் செயல்படும் விதம், மோட்டார் வாகனங்கள் செயல்படும் விதம், தமிழ் கலாச்சாரம் ஆகியவற்றை செய்திருந்தனர்.

மேலும் தமிழ் உருது, ஆங்கிலம், கணிதம், வரலாறு, கணினி தொடர்பான பல மாதிரிகளை மாணவர்கள் தயார் செய்து அதன் தன்மைகளை பொதுமக்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விளக்கினர்.

கண்காட்சியை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோர் பார்வையிட்டனர்.

நிகழ்ச்சியில் பள்ளி நிர்வாகிகள், முத்தவல்லி இஸ்மாயில், திமுக நகர துணைச் செயலாளர் கே.தென்னரசு, திமுக பொதுக்குழு உறுப்பினர் ரவி ரெட்டி, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் பள்ளி துணை முதல்வர் ஷம்சாத் பேகம் நன்றி கூறினார்.



# கிருஷ்ணகிரியில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் அவசர ஆலோசனைக் கூட்டம்!

கிருஷ்ணகிரி டிச.10

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் ரவி, மாவட்ட பொது செயலாளர் அனுமந்தராசு ஆகியோர் முன்னிலையில் நடைப்பெற்ற இந்தக் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாராக தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் இராமகவுண்டர் கலந்துக்

கொண்டு சிறப்புரை ஆற்றினார்

அப்போது பேசிய இராம கவுண்டர்

கடந்த 2012ம் ஆண்டு மத்திய அரசு காவேரி டெல்டா மாவட்டத்தில்

ஓ.என்.ஜி.சி அமைக்க அனுமதி அளித்ததை எதிர்த்தும் விவசாயத்தை காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக அனைத்து விவசாயிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன் உள்ளிட்ட விவசாயிகள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர் இந்தப்போராட்டத்தில்பொதுச்சொத்துக்களை சேதப்படுத்தியதாக கூறி வி.ஆர்.பாண்டியன், செல்வராஜ் உள்ளிட்ட 22 பேர்கள் மீது

பசுமை தீர்பாயம் வழக்கு தொடரப்பட்டது. பின்னர் வழக்கு முடிந்து வைக்கப்பட்ட நிலையில் மீண்டும் இந்த வழக்கினை நீதிமன்றம் கொண்டு சென்று பி.ஆர்.பாண்டியன் மற்றும் செல்வராஜ் ஆகியோருக்கு நீதி மன்றம் 13 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ள சம்பவம்

ஒட்டு மொத்த விவசாயிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

விவசாய நிலம் மற்றும் விவசாயிகளை காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக போரடிய குற்றத்திற்காக இன்று பி.ஆர். பாண்டியன் உள்பட இரண்டு பேருக்கு வழங்கப்பட்டுள்ள இந்த தீர்ப்பினை மான்புமிகு நீதிபதிகள் ரத்து செய்யப்பட வேண்டும் எனறு இந்த கூட்டத்தின் வாயிலாக தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டுள்ளதாக இராமகவுண்டர் தெரிவித்தார்.

அப்போது தமிழக விவசாய சங்கத்தினை சேர்ந்த நிர்வாகிகளான

சின்னசாமி, சரவணகுமார், சுரேஷ், குமரன், பிரபு ,வெங்கடேஷ் பாபு, ராமன், சக்திவேல், கிருஷ்ணன, எல்லப்பன், ரமேஷ் உள்ளிட்ட ஏராளமான விவசாயிகள் உடன் இருந்தனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH




கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆட்சியர் அரங்க கூடாரத்தில் முன்னாள் படை வீரர்கள் நல துறையின் சார்பாக படைவீரர்கள் கொடி நாள் விழா மாவட்ட ஆட்சியர் எம். எஸ். பிரசாந்த் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் முன்னாள் முப்படை வீரர்கள் நலன் உதவி இயக்குனர் ஆயிஷா பேகம், கள்ளக்குறிச்சி மாவட்ட முன்னாள் முப்படை வீரர்கள் நல சங்க தலைவர் டாக்டர் கண்ணன், திருக்கோவிலூர் முன்னாள் வீரர்கள் நலசங்கத் தலைவர் முஜீர்கான், கல்யாணகுமார், ராமச்சந்திரன், தங்கராதரன், சம்பத், பத்மநாபன் மற்றும் 100க்கும் மேற்பட்ட முன்னாள் முப்படை ராணுவ வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முன்னாள் முப்படை வீரர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தேநீர் விருந்து அளித்து உபசரித்தார்.



# கவுசிகா நதி நீர்வழித்தடத்தில் சீமை கருவேல மரங்கள் அகற்றும் பணி!

கோவை, டிச.10–

ரோட்டரி கோயமுத்தூர் இன்ஃப்ரா, கோயம்புத்தூர் எர்த் மூவர்ஸ் உரிமையாளர்கள் நலச் சங்கம், கவுசிகா நீர் கரங்கள் இணைந்து 90க்கும் மேற்பட்ட பொக்லைன் வாகனங்களை வைத்து சமுதாயப் பணியாக நதிக்காக ஒரு நாள் என்கின்ற தலைப்பில்

கவுசிகா நதி நீர்வழித்தடத்தில்

6 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூர்வாரி, சீமை கருவேல மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது. இதில் இடிகரை பேரூராட்சி உட்பட்ட நீர்வழிப்பாதை, கீரணத்தம் ஊராட்சிக்குட்பட்ட நீர் வழிப் பாதை, சர்க்கார் சாமக்குளம் ஊராட்சிக் குட்பட்ட நீர்வழிப் பாதையில் சுமார் 6 கிலோ மீட்டருக்கு புனரமைப்பு பணிகள் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கோயம்புத்தூர் எர்த் மூவர்ஸ் உரிமையாளர்கள் நலச் சங்கத்தின் தலைவர் சந்திரசேகர், சங்க பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், கவுசிகா நீர் கரங்கள் தலைவர் செல்வராஜ், பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், ரோட்டரி கோவை மாவட்ட வருங்கால ஆளுநர் மாருதி, மயில்சாமி, செந்தில் ராஜகோபால், காமராஜ், நவீன் குமார், ரோட்டரி கோயமுத்தூர் இன்ப்ரா தலைவர் சதீஷ்குமார் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். சீமை கருவேலை மரங்களை அகற்றுவதன் மூலம் நீர் வழித்தடங்களில் நீர் சீராக செல்வதற்கும், நீர்ப்பாசனத்திற்கும் வழி வகைக்கும் என கவுசிகா நீர்க்கரங்கள் அமைப்பினர் தெரிவித்தனர்.

# உணவு டெலிவரி நிறுவன ஊழியர் தூக்கிட்டு சாவு!

கோவை, டிச.10–

கடலூர் மாவட்டம் குறிச்சிபதி பகுதியை சேர்ந்தவர் வீரமணி (42). இவர் கோவை காந்திபுரம் கிராஸ்கட் ரோடு 1வது வீதியில் உள்ள மேன்சனில் தங்கிருந்து உணவு டெலிவரி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். இந்த நிலையில் கடந்த 4ம் தேதி பணியை முடித்து வீரமணி மேன்சனுக்கு திரும்பினார்.

அதன் பின்னர் அவர் அறையை விட்டு வெளியே வரவில்லை. நேற்று அவரது அறையில் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. இதனால்சந்தேகம்அடைந்த மேன்சன் உரிமையாளர் சரவணக்குமார் அவரது அறை கதவை தட்டி உள்ளார். வெகு நேரமாகியும் வீரமணி கதவை திறக்காததால் அங்கிருந்தவர்கள் உதவியுடன் சரவணக்குமார் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தார்.

அப்போது அங்கு வீரமணி தூக்கில் அழுகிய நிலையில் இறந்து கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து சரவணக்குமார் காட்டூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். தகவலின் பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து வீரமணியின் உடலை மீட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து வீரமணியின் குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து போலீசார் வழக்கு பதிவு செய்து வீரமணி எதற்காக தற்கொலை செய்து கொண்டார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஒகேனக்கல் பகுதியில்

# கைகளை கட்டிய நிலையில் காவிரி ஆற்றில் ஆண் பிணம்!

## அடித்துக்கொலையா? போலீஸ் விசாரணை!!

பென்னாகரம், டிச.10

தர்மபுரி மாவட்டம், ஒகேனக்கல் ஆலம்பாடி நீலகிரி தோப்பு வனப்பகுதியில் அடையாளம் தெரியாத ஆண் சடலம் கைகள் கட்டப்பட்ட நிலையில் காவிரி ஆற்றில் பிணமாக மிதந்தார். அந்த உடல் நீலகிரி தோப்பு வனப்பகுதியில் கரை ஒதுங்கியது. அதனை கண்டு திடுக்கிட்ட இந்த நிலையில் அவ்வழியாக சென்ற உள்ளூர் வாசிகள் பார்த்து ஒகேனக்கல் போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். உடனே சம்பவ இடத்திற்கு வந்த பென்னாகரம் போலீஸ் துணை சூப்பிரண்டு பாலகிருஷ்ணன் மற்றும் ஒகேனக்கல் இன்ஸ்பெக்டர் முரளி தலைமையிலான போலீசார் விரைந்து சென்றனர். ஆற்றில் மிதந்த அடையாளம் தெரியாத ஆண் பிரேதத்தை கைப்பற்றி யார் இவர்? எந்த ஊரை சேர்ந்தவர்? கொலை செய்யப்பட்டு ஆற்றில் வீசப்பட்டு இருக்கலாமா ? என்ற கோ ணத்தில் விசாரணை மே ற்கொண்டு வருகின்றனர் .



ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டியில் இந்து முன்னணி அமைப்பின் சார்பில் முருக பக்தர்களுக்கு திருப்பரங்குன்றம் கோபுரத்தில் தீபம் ஏற்ற அனுமதி மறுத்த தி.மு.க அரசை கண்டித்தும் மேலும் நீதிமன்ற தீர்ப்பை மதிக்காத தி.மு.க, அரசை கண்டித்தும் தீபம் ஏற்ற சென்றவர்களை கைது செய்ததை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## கொடிவேரி அணை பகுதியில்

# வாய்க்காலில் மூழ்கி மாணவன் பலி!

கோபி,டிச.10

கோபியை அடுத்த கடத்தூர் அருகே உள்ள பழையூரை சேர்ந்தவர் சுப்பிரமணி. இவரது மகன் கபிலன் (17). இவர் அரசு நிதியுதவி பெறும் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார்.

நேற்று கொடிவேரி அணை அருகே உள்ள கருப்புசாமி கோயில் பகுதியில் வாய்க்காலில் கபிலன் உட்பட 4 சிறுவர்கள் குளிக்க சென்றனர்.அப்போது, கபிலன்சற்று ஆழமான பகுதிக்கு சென்றதால் நீச்சல் தெரியாமல்தண்ணீரில் மூழ்கினார். அவருடன் சென்ற சிறுவர்கள் கபிலனை காப்பாற்ற முடியாமல் சத்தம்போட்டனர். அருகில் இருந்தவர்கள் ஓடிவந்து கபிலனை மீட்டு கரையில் சேர்த்தனர். பின்னர் கோபி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.அங்கு பரிசோதித்த டாக்டர்கள் ஏற்கனவே கபிலன் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து பங்களாப்புதூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பைக் விபத்தில் பெண் பலி!

கோவை, டிச. 10

கோவை கவுண்டம்பாளையம் கருப்புசாமி நகரை சேர்ந்தவர் ராஜா. இவரது மனைவி கவுரி (55). இவர் நேற்று முன்தினம் இரவு மேட்டுப்பாளையம் ரோட்டில் நடந்து சென்று கொண்டு இருந்தார்.

அப்போது அந்த வழியாக அதிவேகமாக வந்த பைக் திடீரென கட்டுப்பாட்டை இழந்தை கவுரி மீது மோதியது. அதில் தூக்கி வீசப்பட்ட கவுரி பலத்த காயம் அடைந்தார். அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தார்.

இதுகுறித்து மேற்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் மருத்துவமனைக்கு வந்து கவுரியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து போலீசார் கேரளா மாநிலம் பாலக்காட்டை சேர்ந்த அணில்குமார் (29) என்பவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ராசிபுரம் அருகே

# இருசக்கர வாகனம் மோதி கல்லூரி மாணவன் பலி!

ராசிபுரம்,டிச.10–

சேலம் மாவட்டம் தம்மப்பட்டி ஏரிக்கடை பகுதியை சேர்ந்த புஷ்பராஜ் மகன் சரத், 19 இவர் நாமகிரிப்பேட்டையில் உள்ள தனது நண்பன் மணிகண்டனில் பை க்கை வாங்கி கொண்டு புதுப்பா ளையத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு கொண்டிருந்தார். அப்போது புதுப்பாளையத்தை சேர்ந்த கல்லூரி மாணவன் தணிக்கை செல்வன், (19) திடீரென சாலையோரம் நடந்து சென்று கொண்டிருந்தார். சரத் வண்டி, கட்டுப்பாட்டை இழந்து தணிக்கை செல்வன் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட தணிக்கை செல்வன்தலையில் அடிப ட்டு சம்பவ இடத்திலேயே இறந்தார். இது குறித்து ராசிபுரம் போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.



## திருவெண்ணெய்நல்லூர் அருகே

# தனியார் பேருந்துகள் மூதாட்டி மீது மோதி கால் உடைந்து விபத்து!

திருவெண்ணெய்நல்லூர், டிச.10

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள அண்டராயநல்லூர் கிராமத்தைச் சார்ந்த சந்தானம் மனைவி மாரியம்மாள்(60) இவர்திருவெண்ணெய்நல்லூரில் உள்ள ஒரு ஓட்டல் கடையில் வேலை செய்துவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக பண்ருட்டியில் இருந்து திருக்கோவிலூர் நோக்கி செல்லும் அபிராமி பேருந்தில் ஏறி சென்றுகொண்டிருந்தார்.

இந்த பேருந்திற்கும் பின்னால் கடலூரில் இருந்து வருகின்ற துர்கா பேருந்திற்கும் இடையில் சீட்டு ஏற்றுவதற்காகபோட்டி போட்டுக் கொண்டு வேகமாக வந்தனர். அப்போது அபிராமி பேருந்தில் இருந்து ஆண்டராயநல்லூரில் கீழே இறங்கி நடந்து வந்த மாரியம்மாள் மீது பின்னால் வந்த பேருந்து மோதி பலத்த காயமடைந்து கைகால் உடைந்து ஆபத்தான நிலையில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். இது குறித்து திருவெண்ணெய்நல்லூர் போலீசார் உடனடியாக விரைந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தனியார் பேருந்துகள் சீட்டு ஏற்றுவது காரணமாக ஏற்பட்ட போட்டியில் முதாட்டி மீது பேருந்து மோதி படுகாயம்அடைந்தசம்பவம் இப்பகுதி மக்களுடைய பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துள்ளது. அதிகாரிகள் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை எடுத்துள்ளனர்.

# கராத்தே போட்டியில் வென்ற மாணவர்களுக்கு பாராட்டு!

சிதம்பரம், டிச.10

சிதம்பரம் வீனஸ்மேல்நிலை பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கான கராத்தே மற்றும் சிலம்பம் தகுதி தேர்ச்சி போட்டி நடைபெற்றது. போட்டியில் சிதம்பரம் வீனஸ் CBSE பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு மஞ்சள் மற்றும் பச்சை பெல்ட், பாரட்டு சான்றிதழ் மற்றும் பரிசு கோப்பை பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்தனர்.

மே லும், பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான போட்டியும் நடைபெற்றது. மாணவர்களுக்கு உறுதுணையாக ஆசிரியர்கள் வடிவுக்கரசி, அருட்செல்வி பங்கேற்றனர். பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுகோப்பையை பள்ளி தலைவர் குமாரிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர். கராத்தே பயிற்சியாளர் . குமரகுரு மற்றும் சிலம்பம் பயிற்சியாளர் த ராஜேஷ் குமார் உடனிருந்தனர்.



## நாட்றம்பள்ளியில்

# தி.மு.க. மாவட்ட செயலாளர் க.தேவராஜ் தலைமை யில் ஆலோசனைக் கூட்டம்!

நாட்றம்பள்ளி டிச.10

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக அலுவலகத்தில் நடைபெற்ற நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம், நாட்றம்பள்ளி பேரூர் கிளைக் கழகம் மற்றும் பாக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை.னஅமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மற்றும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி சிறப்பு அழைப்பாளராககலந்து கொண்டு, பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய செயலாளர், திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார் இக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாட்றம்பள்ளி பேரூர் செயலாளர் எஸ்.உமாசந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ்,

பேரூர் இளைஞரணி அமைப்பாளர் கீர்த்திராஜன், ஒன்றிய, பேரூர்நிர்வாகிகள் கணேசன், சரஸ்வதி, பரிதிமணி, சக்கரவர்த்தி, பால்ராஜ், சரவணன், திருகுமரன் ஜவகர், மகேந்திரன், புருஷோத்தமன், சிவக்குமார் மாதவன், ஆனந்தன், செந்தில்குமார், அசோக்குமார், அண்ணாமலை, செல்வராஜ், நாகராஜ் மற்றும் கிளைக்கழக, பாக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப் பாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## கோபி அருகே

# காவலாளி தூக்குப்போட்டு தற்கொலை!

கோபி, டிச.10–

கோபி அடுத்த கள்ளிப்பட்டி அருகே உள்ள கணக்கம்பாளையம் கள்ளியங்காடு கள்ளியங்காடு பகுதியை சேர்ந்தவர் முருகேசன் (55). இவர் குடும்பத் துடன் திருப்பூரில் தங்கியிருந்து அங் குள்ள தனியார் பனியன் நிறுவனத் தில் காவலாளியாக வேலை செய்து வந்தார். இந்த நிலையில் கணக்கம்பா ளையத்தில் உள்ள வீட்டுக்கு வந்து, தங்கிய அவர் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்த தகவல் கிடைத்ததும் பங்களாப்புதூர் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று உடலை பார்வையிட்டு விசாரணை நடத்தினார்கள். விசாரணையில், குடிப்பழக்கத்துக்கு அடிமையான முருகேசன் சரிவர வேலைக்கு செல்லாமல் இருந்து வந்ததால் குடும்பத்தினருடன் தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. ஏற்பட்ட தகராறில் முருகேசன் கோபித்துக் கொண்டு கணக்கம்பாளையத்தில் உள்ள வீட்டுக்கு வந்து தற்கொலை செய்து கொண்டார்' என்பது தெரியவந்தது. உடலை கைப்பற்றிய போலீசார் பிரேத பரிசோதனைக்காக கோபி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் வள்ளலார் பிறந்த நாளை முன்னிட்டு தாராபுரம் ஐந்து முக்கு சாலையில் அமைந்துள்ள வள்ளலார் ஆசிரமத்தில் உள்ள மாணவர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டு 300க்கும்மேற்பட்டோருக்குஅன்னதானம்வழங்கப்பட்டதுஇவ்விழாவில் ஆசிரமத் தலைவரும் முன்னாள் சட்டமன்ற தலைவரும் வி. எஸ். காளிமுத்து, ஆட்டோ நாகராஜ், சண்முகம், சிவராஜ், ராதாகிருஷ்ணன், செல்வி, மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கோவை அரசு மருத்துவமனையில்

# தாய்ப்பால் கொடுத்த போது பெண் குழந்தை திடீர் சாவு!

கோவை,டிச.10–

திருப்பூர் மாவட்டம் பல்லடம் காமநாயக்கன்பாளையம் பகுதியை சேர்ந்தவர் அனில் (21). இவரது மனைவி பூஜா (20). இவர்களுக்கு ஒரு மாதமேயான ஸ்ரீனி என்ற மகள் இருந்தார். இந்த நிலையில் பூஜாவிற்கு கடுமையான தலை மற்றும் கால் வலி இருந்து வந்துள்ளது அதற்காக பல்லடத்தில் சிகிச்சை பெற்று வந்தார்.

அப்போது டாக்டர்கள் அவரை மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்க அறிவுறுத்தி உள்ளனர். இதையடுத்து பூஜா கடந்த மாதம் 28ம் தேதி கோவை அரசு மருத்துவமனையில் உள்ள பிரசவ வார்டில் அனுமதிக்கப் பட்டார்.

அதிகாலை 4 மணியளவில் பூஜா தனது குழந்தை ஸ்ரீனிக்கு தாய் பால் கொடுத்துள்ளார். பின்னர் இருவரும் தூங்கியதாக தெரிகிறது. காலை 7 மணியளவில் எழுந்த போது குழந்தை அசைவின்றி கிடந்ததை அனில் மற்றும் பூஜா பார்த்துள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் டாக்டருக்கு தகவல் தெரிவித்தனர். டாக்டர் உடனே வந்து குழந்தையை பரிசோதனை செய்து பார்த்தார். அப்போது குழந்தை இறந்து இருந்தது தெரியவந்தது. இதனால் கணவன் மனைவி இருவரும் கதறி அழுதனர்.

இது அங்கிருந்தவர்களை சோகத்தில் ஆழ்த்தியது. பின்னர் இதுகுறித்து ரேஸ் கோர்ஸ் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து குழந்தையின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்க அனுப்பி வைத்தனர். இதையடுத்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



வால்பாறை அருகே சிறுவனை தாக்கி கொன்ற சிறுத்தையை கண்காணிக்க குடியிருப்பு பகுதி அருகே நான்கு கண்காணிப்பு கேமரா பொருத்தி வனத்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



சேலம் மாவட்டம் சங்ககிரி உட்கோட்டத்தில் 105 புதிய சி.சி.டி.வி. கேமராக்களை போலீஸ் எஸ்.பி. கௌதம் கோயல் தொடங்கி வைத்தார்.

## சங்ககிரி உட்கோட்டத்தில்

# 105 புதிய சி.சி.டி.வி. கேமராக்கள் அமைப்பு!

## போலீஸ் எஸ்.பி. கௌதம் கோயல் தொடங்கி வைத்தார்!!

எடப்பாடி டிச.10

சேலம் மாவட்டம் சங்ககிரி காவல் உட்கோட்ட பகுதிக்குட்பட்ட தேவூர் பகுதியில் பொதுமக்கள் மற்றும் பல்வேறு பொதுநல அமைப்புகள் பங்களிப்புடன் 43 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 105 சிசிடிவி கேமராக்களின் செயல்பாட்டை சேலம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கௌதம் கோயல் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், தேவூர் பகுதிகளில் நடக்கும் குற்றங்களை தடுப்பதற்கும், குற்றவாளிகளை காண்பதற்கும் இக்கண்காணிப்பு கேமராக்கள் உதவும் எனவும் இந்த கேமராக்கள் மூலம் பொதுமக்கள் பாதுகாக்கப்படுகின்றனர் எனவும் பொது மக்களின் பாதுகாப்பிற்காக மூன்றாவது கண் எனவும் பெருமிதத்துடன் கூறினார் அதனைத் தொடர்ந்து கேமராக்கள் அமைக்க உதவிய பங்களிப்பாளர்களுக்கு சேலம் மாவட்ட கண்காணிப்பாளர் கௌதம்கோயல் நினைவு கேடயங்களை வழங்கி வெகுவாக பாராட்டினார்.

அப்போது சங்ககிரி உள்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் தனசேகரன், துணைக் காவல் கண்காணிப்பாளர்(பயிற்சி). துரைகுமார், காவல் ஆய்வாளர் ரமேஷ் மற்றும் காவல் உதவி ஆய்வாளர்கள் காவலர்கள் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட சட்ட மாமேதை சமத்துவ தலைவர் 69 ஆவது நினைவு தினத்தை பாரதிய ஜனதா கட்சியின் கட்சியின் விழுப்புரம் தெற்குமாவட்டதலைவர் தர்மராஜ் தலைமையில் அம்பேத்கர்சிலைக்குமாலை அணிவித்து மரியாதை செலுத்தி வீரவணக்கம் செலுத்தினர். நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட தலைவர் லிவரதன் மாவட்ட செயலாளர் பத்ரி நாராயணன் நகரச் செயலாளர் ராஜாஜி என பலர் உடன் இருந்தனர்

## தர்மபுரி குமாரசாமிப்பேட்டை

# ஆனந்த நடராஜர் கோயிலில் ருத்ரா அபிஷேகம்!

## திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம்!!

தர்மபுரி, டிச. 10

தர்மபுரி குமாரசாமி ப்பேட்டை ஆனந்த நடராஜர் கோயிலில் ருத்ரா அபிஷேகம் நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



தர்மபுரி குமாரசா மிப்பேட்டை சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வளாகத்தில் உள்ள சிவகாமசுந்தரி உடனாகிய ஆனந்த நடராஜர் கோயிலில் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் 3வது வார சோமவார தினத்தன்று ருத்ரா அபிஷேகம் நடத்தப்படுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு ருத்ரா அபிஷேகம் கோயில் வளாகத்தில் நடந்தது. இதையொட்டி கோயில் வளாகத்தில் சிறப்பு யாக பூஜைகள் மற்றும் சிறப்பு ஆராதனை நடந்தது. பின்னர் 108 சங்கு பூஜை மற்றும் பூர்த்தி ஹோமம் நடந்தது.

இதைத்தொடர்ந்து 11 வகையான தீர்த்தங்கள் மற்றும் வாசனை திரவியங்களை கொண்டு ஆனந்த நடராஜர் மற்றும் சிவகாமசுந்தரிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் உபகார பூஜைகள் நடந்தன.

கோவில் அர்ச்சகர் மோகன் தலைமையிலான சிவாச்சாரியார்கள் சிறப்பு யாகத்தில் கலந்து கொண்டு வேத மந்திரங்களை ஓதி சிறப்பு பூஜை செய்தனர்.

இந்த சிறப்பு வழிபாட்டின் போது சிவகாம சுந்தரி உடனாகிய ஆனந்த நடராஜருக்கு சிறப்பு அலங்கார சேவையும், மகா தீபாராதனையும் நடந்தது.

இந்த வழிபாட்டில் ஏராளமான சிவனடியார்கள் பங்கேற்ற திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சி நடந்தது. இந்த சிறப்பு யாகத்தில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. மேலும் சிறப்பு யாக பூஜையில் கலந்து கொண்ட சிவனடி யார்களுக்கு அபிஷேக விபூதி மற்றும் ருத்ராட்சம் பிரசாதமாக வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை திருவாசக குழுவினர், சிவ பக்தர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.



நரிப்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கான சிலம்பப்பயிற்சி நடந்தது.

## தர்மபுரி அருகே

# டூவீலரில் சென்ற சிறப்பு எஸ்.ஐ. பலி!

## நாய் குறுக்கே பாய்ந்ததால் நிலைதடுமாறி விபத்து!!



தர்மபுரி, டிச. 10

தர்மபுரி அடுத்துள்ள குள்ளனூர், 2வது தெருவை சேர்ந்தவர் தமிழழகன், (56)இவர் மதிகோன்பாளையம் போலீஸ் ஸ்டேஷனில் எஸ்எஸ்ஐ ஆக பணிபுரிந்து வந்தார். இவருக்கு மலர், (45) என்ற மனைவி இரு மகன்கள், ஒரு மகள் உள்ளனர். இந்த நிலையில், தமிழழகன் நேற்று முன்தினம் காலை, அவருடைய ஸ்கூட்டரில் வெண்ணாம்பட்டி தர்மபுரி சாலையில், ரயில்வே கேட் அருகே சென்றபோது, திடீரென நாய் ஒன்று குறுக்கே பாய்ந்தது.

இதனால், நிலை தடுமாறி சாலையில் தவறி விழுந்து பலத்த காயமடைந்தவரை மீட்டு, ஆட்டோ மூலம் தர்மபுரி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சையில் இருந்தவர் உயிரிழந்தார். இது குறித்து தர்மபுரி டவுன் போலீசார் விசாரிக்கின்றனர்.

## வாக்கு எண்ணும் மையமான

# நாமக்கல் அரசு சட்டக்கல்லூரியில் போலீஸ் எஸ்.பி - உதவி கலெக்டர் ஆய்வு!!

நாமக்கல், டிச.10

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 6 சட்டசபை தொகுதிகளுக் கான வாக்குகள் கடந்த சில ஆண்டுகளாக திருச்செங்கோடு விவேகானந்தா கல்லூரியில் எண்ணப்பட்டு வருகின்றன. வருகிற சட்டமன்ற தேர்தலில் பதிவாகும் வாக்குகளை எண் ணும் இடத்தை தேர்வு செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதையொட்டி நேற்று நாமக்கல் அரசு சட்டக்கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை மையம் அமைக்க வசதிகள் உள்ளதா? என மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு விமலா தலைமையில் அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது நாமக்கல் உதவி கலெக்டர் சாந்தி, தேர்தல் தாசில்தார் செல்வராஜ், மண்டல தாசில்தார் இளங்கோ, பொதுப்பணித்துறை என்ஜினீயர் பிரியா ஆகியோர் உடன் இருந்தனர். இந்த கல்லூரி வளாகத்தில் போதுமான கட்டிட வசதி உள்ளது. மேலும் நாமக்கல் திருச்செங் கோடு மெயின் ரோட்டில் இருந்து சட்டக்கல்லூரி வளாகம் சுமார் 500 மீட்டர் தொலைவில் உள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் போதிய பாதுகாப்பு வசதி அளிக்க முடியும் எனவே முதல் முறையாக அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் நாமக்கல், ராசிபுரம், சேந்த மங்கலம், பரமத்தி வேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் ஆகிய தொகுதிகளில் பதிவாகும் ஓட்டுகளை நாமக்கல் சட்டக்கல்லூரி வளாகத்தில் எண்ணும் வகையில் ஓட்டு எண்ணிக்கை மையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



நாமக்கல் மாவட்டம் மோகனூர் அருகே குமரிப்பாளையத்தில் குடிநீரில் கழிவுநீர் கலந்து வருவதால் நடவடிக்கை கோரி கிராம மக்கள் கலெக்டரிடம் மனு அளிக்க வந்தனர்.




# மகாராஷ்டிரா ஒரே மாதத்தில் அதிக சூரிய வேளாண் பம்புகள் நிறுவி உலகச் சாதனை!

சென்னை,டிச.10

மகாராஷ்டிரா மாநில மின்சார விநியோக கழகம் (MSEDCL) வெறும் 30 நாட்களில் 45,911 ஆஃப்கிரிட் சூரிய வேளாண்பம்புகளைநிறுவிகின்னஸ்உலகச்சாதனையில் இடம்பிடித்துள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலை விவசாயத்துடன்இணைக்கும்இந்தியாவின்மிகப்பெரிய முயற்சிகளில் இது ஒன்றாகும்.

PMKUSUM மற்றும் MTSKPY திட்டங்களின் மூலம் விரைவான நிறுவல்கள் மேற்கொள்ளப்பட்டதால், விவசாயிகள் டீசல் செலவில் இருந்து விடுபட்டு, சுற்றுச்சூழல் நட்பு பாசனத்தைப் பெறுகின்றனர். வடிவமைக்கப்பட்ட திட்டமிடல், விற்பனையாளர் பொறுப்புணர்வு, மாவட்ட அளவிலான வேகமான நிறுவல் ஆகியவை MSEDCL சாதனையின் முக்கிய காரணங்களாகும்.

இந்த முன்னேற்றம் குறித்து ஜி.கே. எனர்ஜியின் CMD & CEO ஜி.கிருஷ்ணகுமார், MSEDCL CMD லோகேஷ் சந்திரா (IAS) மற்றும் மாநிலத்தின் துணை முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் ஆகியோர் பெருமையை வெளிப்படுத்தினர். சூரிய பாசனம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி, மாநில மின்சார கட்டமைப்பின் சுமையை குறைக்கும் வரலாற்றுச் செயலாக இது பாராட்டப்பட்டது.



நீலகிரி மாவட்டம் கோத்தகிரி குள்ளங்கரை பழங்குடியின கிராமத்துக்கு அரசுப் பேருந்து சேவையை அரசு தலைமைக் கொறடா கா.ராமசந்திரன், திமுக மாவட்ட பொறுப்பாளர் கே.எம் ராஜு ஆகியோர்பேருந்து சேவையைத் தொடங்கிவைத்தனர்.தங்களது கிராமத்துக்கு முதன்முறையாக வந்த அரசுப் பேருந்தில் பழங்குடியின மக்கள் பயணம் செய்து மகிழ்ச்சியடைந்தனர்.

# கள்ளக்காதல் விவகாரத்தில் இளம் பெண் தீக்குளிப்பு!

ஊட்டி, டிச. 10

ஊட்டி லவ்டேல் அடுத்த அன்பு அண்ணா காலனி பகுதியை சேர்ந்தவர் கார்த்திக். இவருடைய மனைவி நவதரணி, (32), (13) வயதில் ஒரு மகனும் 7 வயதில் ஒரு மகளும் உள்ளனர். குடும்பத் தகராறு காரணமாக, நவதரணி கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறார். தற்காலிகமாக தாலுகா அலுவலகத்தில் பணியாற்றி வந்தார். நவதரணிக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த திருமணம் ஆகி மனைவியை பிரிந்த பொக்லைன் டிரைவர் பாலமுருகன், (34), என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் நாளடைவில் கள்ளக்காதலாக மாறி விட்டது. நவதரணியை பாலமுருகன் திருமணம் செய்ய திட்டமிட்டு இருந்தார்.இதற்கிடையில் முதல் கணவரிடமிருந்து விரைவில் விவாகரத்து வாங்கி வரும்படியும், 3 மாத காலத்திற்குள் விவாகரத்து வாங்காவிட்டால் நான் பேச மாட்டேன். என்றும் பாலமுருகன் கூறியுள்ளார். விரத்தியடைந்த நவதரணி, மண்ணெ ண்ணையை உடலில் ஊற்றி தற்கொலைக்கு முயன்றார்.அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக ஊட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.இதுகுறித்து லவ்டேல் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் ஆட்டோ டிரைவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி விடுதலை சிறுத்தைகள் கட்சி கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம். சாதிக் தலைமையில்கலெக்டர் அலுவலக வளாகத்தில் தர்ணா போராட்டம் நடத்தினர்.

# கோபியில் விதிமுறை மீறி பைக் பேரணி!

## த.வெ.க. நிர்வாகிகள் மீது வழக்கு!!

கோபிடிச 10

கோபியில் முன்னாள் அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தார். அவர் தவெக தலைமை நிர்வாக குழு ஒருங்கிணைப்பாளராகநியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்று அதிமுகவில் இருந்து விலகி தவெகவில் இணைவதற்காக இரு சக்கர வாகனங்களில் கோபிகடத்தூர் சாலையில் பேரணியாக தொண்டர்கள் வந்தனர். அப்போது ,பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் அதிவேகமாக சென்றதாக அளுக்குளியை சேர்ந்த பாண்டு ரங்கசாமி (தற்போது தவெக உறுப்பினர்) என்பவர்மீதும், வெடிபொருட்களைஅஜாக்கிரதையாக கையாண்டு, பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதமாக இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் ஊர்வலமாக சென்ற தவெக ஒன்றிய செயலாளர் நவீன்குமார்ஆ கியோர் மீது கோபி போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.



## சோனியா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு

# காவேரிப்பட்டினத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் வினாயகர் திருக்கோவிலில் சிறப்பு பூஜைகள்!

கிருஷ்ணகிரி,டிச.10

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் பல்வேறு இடங்களில் முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் அன்னை சோனியா காந்தியின் 79வது பிறந்த தினம் உற்சாகமாகக் கொண்டப்பட்டது.

இதன் ஒருபகுதியாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினருமான எல். சுப்பிரமணியன் தலைமையில் அன்னை சோனியா காந்தியின் பிறந்தநாளி னை முன்னிட்டு காவேரிப்பட்டினத்தில் உள்ள பிரசித்தி பெற்ற வினாயகர் திருக்கோவிலில் சிறப்பு பூஜைகள் நடைப்பெற்றது. அப்போது பூ மாலைகள், பழவகைகள், தேங்காய் உள்ளிட்ட பல்வேறுவாசனை திரவிங்ளை காங்கிரஸ் கட்சியினர் எடுத்து வந்து வினாயகர் பெருமானுக்கு சிறப்பு பூஜையில் ஈடுப்பட்டனர். பின்னர் அன்னை சோனியா காந்தியின் பிறந்தநாளினை சிறப்பிக்கும் வகையில் பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் லட்டுகளை முன்னாள் காங்கிரஸ் தலைவர் எல். சுப்பிரமணியன் வழங்கி சிறப்பித்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய எல். சுப்பிரமணியன் அன்னை இந்திரா காந்தியின் மருமகளாக இந்தியாவிற்கு வந்து காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியதோடு நாட்டு மக்களின் பசியை போக்கிட மகாத்மா காந்தி தேசிய ஊராக வேலை உறுதி திட்டத்தின் மூலம் பசியை போக்கி அன்னப் பூரணியாகவும், நாடு போற்றும் உத்தம தலைவியாக விளங்கும் சோனியா காந்தியின் பிறந்தநாளினை கொண்டாடுவதில் நாங்கள் பெருமை கொள்வதேடு வருகின்ற காலங்களில் அன்னையின் தலைமையில் காங்கிரஸ் கட்சி மலர்ந்திட இந்த நல்நாளில் உறுதி எடுப்போம் என்று குறிப்பிட்டார்.

அப்போது முன்னாள் ஆகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் முத்து, முன்னாள் நகர தலைவர் தக்காளி தவமணி மாநில சிறுபாண்மை பிரிவு துனைத் தலைவர் ஜாவித்கான், முன்னாள் கவுன்சிலர் இராதாகிருஷ்ணன், மாவட்ட கலைப் பிரிவு மாவட்ட தலைவர் கோவிந்தசாமி வட்டார பொறுப்பாளர் செல்வராஜ் கௌரவ தலைவர், கருணாமூர்த்தி, வட்டார துணைத்தலைவர்கள் கோவிந்தசாமி, தனபால், சிறுபாண்மை வட்டார தலைவர் முஸ்தப்பா மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த கதிர்வேல், , சரவணன், தேவேந்திரன் உள்ளிட்ட பலர் இந்த விழாவில் கலந்துக் கொண்டு கிறப்பித்தனர்.